ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# பரமனடி ட்ரஸ்டின் பகுதிநேர வைணவ வகுப்பு

உபநயநமானவர்கள் ஸந்த்யாவந்தநம், ஸமிதாதாநம் முதலான வைதிக கர்மங்களைச் செய்ய வேண்டும்; ஶ்ருதி, ஸ்ம்ருதி, இதிஹாஸபுராணங்களைக் கற்கவேண்டும். அதேபோல் ஸமாஶ்ரயணம் ஆன ஸ்ரீவைஷ்ணவர்கள் என்னவெல்லாம் கற்கவேண்டும்? அருளிச்செயல்கள், அவற்றின் ஆழ்ந்த பொருள்கள், ரஹஸ்ய க்ரந்தங்கள் முதலானவற்றை அதிகரிக்க வேண்டும். இதற்கு அடிப்படைத் தேவைதான் என்ன? ஆழ்ந்த வடமொழி மற்றும் தென்மொழிப் புலமைதான். இன்றைய சூழலில் அப்படிப்பட்ட ஆழ்ந்த புலமையுள்ளவர்கள் அரிதாகி வருகின்றனர்; அவற்றைக் கற்பிப்பவர்கள் அரிதாகி வருகின்றனர்; கற்பிக்கும் வாய்ப்புகளும் குறைந்து வருகின்றன. எனவே நமது ‘பரமனடி ட்ரஸ்ட்’ நல்ல அறிஞர்களைக் கொண்டு இருமொழிப் புலமையைப் பொலிவுற வளர்த்து உபய வேதாந்த ஞானத்தை ப்ரகாஶப்படுத்தும் முனைப்பில் இறங்குகிறது.

அந்த முனைப்பின் முன்னுரையாக முதற்கண் இணையவழியில் ஒரு பகுதிநேர ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய அடிப்படை வகுப்பினை ஆரம்பிக்க உள்ளோம். ஸம்ப்ரதாய, வேத, ஆகம நூல்களைப் படிக்க விரும்புவோர்க்குத் தேவையான திண்ணிய அடிப்படை அறிவை இந்த வகுப்பு வகுத்துத் தரும் என்பது திண்ணம்.

## இந்த வகுப்பின் நன்மைகள்தான் என்ன?

ஶாஸ்த்ர, ஸம்ப்ரதாய, ஆகம, வைதிக நூல்களைக் கற்க விரும்புவோர்க்கு இருக்கும் முக்கியமான தடை, வடமொழி தென்மொழியில் நல்ல தேர்ச்சியின்மையே. எழுத்தாளர்கள் பலருடைய படைப்புகளை அநுபவிக்க வைப்பதும், பரந்த அறிவினைப் புகுத்தி, ஶாஸ்த்ர, ஸம்ப்ரதாய அறிவினை வளர்ப்பதுமே இந்த வகுப்பின் சீரிய நோக்கமாகும்.

## இந்த வகுப்பில் யாரெல்லாம் சேரலாம்?

ஸம்ப்ரதாய க்ரந்தங்களை ஆழ்ந்து அநுபவிக்க விரும்புவோர், முழுமையான உபந்யாஸகராக விரும்புவோர், தேர்ந்த அர்ச்சகராக விரும்புவோர், சிறந்த உபாத்யாயராக (வைதிக வாத்யாராக) விரும்புவோர் போன்ற எல்லாரும் இந்த வகுப்பில் சேர்ந்து நல்ல பயன் பெறலாம். இத்துறைகளில் முன்னமே ஈடுபட்டிருப்போர்க்கும் இவ்வகுப்புகள் ஆக்கமும் ஊக்கமும் அளிப்பதாகவே இருக்கும்.

## சேர விரும்புவோர்க்கு வேண்டிய தகுதிகள்தான் என்ன?

உபநயநம் மற்றும் ஸமாஶ்ரயணமான ஸ்ரீவைஷ்ணவர்களாக இருக்கவேண்டும். 7வயது முதல் 20வயதுக்குள் இருந்தால் நன்று. விருப்பமுடைய மற்ற பெரியவர்களும் இவ்வகுப்பில் சேர்ந்து பயன்பெறலாம்.

இது கூகுள்மீட் வழியாக இணையத்தில் நடத்தப்படும் வகுப்பு. கூகுள் க்ளாஸ்ரூம், கூகுள்மீட், கூகுள் காலண்டர் போன்ற செயலிகள் இருக்கவேண்டும். அல்லது வெப் வெர்ஷனைத் தேர்ந்தெடுக்கலாம். தங்களது ஜீமெயில் ஐடியைப் பயன்படுத்திப் பதிவு செய்து கொள்ளலாம். வகுப்புகளில் நடத்தும் பாடங்களின் ரெகார்டை இதில் பதிவு செய்துகொண்டவர்கள் பார்த்துக் கொள்ளலாம். இந்த வகுப்புகளின் அங்கமாக அவ்வப்போது உரையாடல்களும் நடைபெறும். மேலும் உங்களது சந்தேகங்களைத் தெளிவுபடுத்துவோம்; உங்களுக்கு வழிகாட்டுவோம்.

வகுப்புகள் சனி ஞாயிறுகளில் இந்திய நேரப்படி இரவு 6.30 முதல் 8 மணி வரை நடத்தப்படும். வகுப்புகளில் பங்கேற்க முடியாதவர்களுக்குப் பதிவுசெய்யப்பட்ட பாடங்கள் பகிரப்படும். நான்கு வருடகால அளவுள்ள இந்த வகுப்புகள் 2020அக்டோபர் 23ஆம் தேதிமுதல் தொடங்கப்படலாம். அதுபற்றிய விவரங்கள் உங்களது ஈமெயில் ஐடிக்கு அனுப்பப்படும்.

இந்த வகுப்புகள் எல்லாம் **இலவச வகுப்புகளே**. எனினும் இதுபோன்ற காரியங்கள் தொடர்ந்து நடைபெற பரமனடி ட்ரஸ்ட்டுக்கு நன்கொடை அனுப்ப விரும்புமவர்கள் அனுப்பலாம். மேலும் விவரங்களுக்கு https://www.paramanadi.org/donations/ என்ற பக்கத்தைப் பார்க்கவும். அல்லது ஆயர்தேவு செயலியில் மெனுவில் donate என்பதைப் பார்க்கவும். பாடப்புத்தகங்கள் அனைத்தும் இணையத்தில் இலவசமாகக் கிடைக்கும். புத்தகமாக வேண்டுவோர்

வகுப்பில் சேர்ந்தபின் புத்தகங்களைப் பற்றிய விவரங்களை அறிந்து கொண்டு, விலைக்கு வாங்கிக்கொள்ளலாம்.

## இந்த வகுப்புகளில் என்னவெல்லாம் கற்றுத்தரப்படும்?

1. ஸம்ஸ்க்ருதம் எழுத்துக்கள் முதல் அடிப்படை இலக்கணம், இலக்கியங்கள் வரை (அடிப்படை அறிவு உள்ளவர்களும் சேர்ந்துகொண்டு அவர்களுக்குரிய பாடங்கள் வரும்போது கலந்துகொள்ளலாம்).
2. தமிழில் அடிப்படை இலக்கண இலக்கியம்.
3. ஸ்ரீவைஷ்ணவக் கோட்பாடுகளும், நடைமுறைகளும்.
4. தர்ம, ஆகம ஶாஸ்த்ரங்களைப் பற்றிய அறிமுகம்.
5. ஸந்த்யாவந்தந மந்திரங்களின் பொருள்.

இவையெல்லாம் ஶாஸ்த்ர ஸம்ப்ரதாய வல்லுநர்களைக் கொண்டு பயில்விக்கப்படும். சிறப்பு அழைப்பாளர்களைக் கொண்டு அவ்வப்போது முக்கியமான உபந்யாஸ வகுப்புகளும் ஏற்பாடு செய்யப்படும்.

உடனே முன்பதிவு செய்து முழுப்பயனைப் பெற இந்த விண்ணப்பப் படிவத்தில் தங்கள்விவரங்களைக் கொடுக்கவும் : https://forms.gle/frHof8CY6bDPDWms7

அதிகப்படியான விவரங்கள் அறிய: admin@paramanadi.org என்ற மின்னஞ்சலுக்கு ஈமெயில் அனுப்பவும்.